இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 12.02.2026

# விவசாயிகள் விரோத... தொழிலாளர் விரோத..

ஒன்றிய பா.ஜ.க. அரசின் விவசாயிகள் விரோத.. தொழிலாளர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து பிப்ரவரி 12 அன்று தொழிற்சங்க அமைப்புகள் நடத்தும் வேலைநிறுத்தத்துக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

**தொழிற்சங்கங்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற வேண்டும் - விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது என்று தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

மத்திய தொழிற்சங்கங்கள், தொழில்வாரி தொழிற்சங்கங்கள், துறைவாரியான தொழிற்சங்க சம்மேளனங்கள், விவசாய அமைப்புகள் இணைந்து ஒன்றிய அரசின் விவசாயிகள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத மற்றும் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**ஒன்றிய அரசாங்கம் தன்னிச்சையாக மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்காமலும், தொழிற்சங்கங்களோடு முறையாக கலந்து ஆலோசிக்காமலும், நாடாளுமன்றத்தில் விவாதமின்றியே நிறைவேற்றிய நான்கு தொகுப்புச் சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என்பது மிக முக்கியமான கோரிக்கை ஆகும்.**

தொழிலுறவு சட்டத் தொகுப்பு 2000, சம்பளத் தொகுப்பு 2019, பணித்தலப் பாதுகாப்பு மற்றும் பணி நிலைமைகள் சட்டத் தொகுப்பு 2020, சமூகப் பாதுகாப்பு தொகுப்பு 2020 - என்ற நான்கும் தொழிலாளர்களின் ஊதியப் பாதுகாப்பு, வேலைப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகிய மூன்றையும் கேள்விக்குறி ஆக்குகிறது. இவை மக்கள் விரோத, ஜனநாயக விரோத, சமூக விரோதச் சட்டங்கள் ஆகும்.

**தொழிலாளர்கள் 100 ஆண்டு காலமாகப் போராடிப் பெற்ற உரிமைகளை பறித்து கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் பெருநிறுவனங்களுக்கும் ஆதரவாகச் செயல்பட்டு வருகிறது பா.ஜ.க. அரசு.**

மின்சார சட்டத்தை திருத்துவதன் மூலம் உற்பத்தி பகிர்மானம் போன்றவைகள் தனியார் மயமாக்கும் அபாயம் உள்ளதை இப்போராட்டம் வலியுறுத்திச் சொல்கிறது.

மோடி அரசு மூன்று விவசாய சட்டங்களைக் கொண்டு வந்த போது நாட்டின் ஒட்டு மொத்த விவசாய சமூகமும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராடியது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மனமில்லாமல் அதனை திரும்பப் பெற்றார்கள். இப்போதும் ஏதாவது ஒரு வழியில் அதனை அமல்படுத்த நேரம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது பா.ஜ.க. அரசு.

**விவசாயிகளின் விளைபொருளுக்கு நியாயமான விலை வழங்குவோம் என்ற உத்தரவாதத்தை இதுவரை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்றவில்லை. விதைகள் சட்டத்தை திருத்தம் செய்து சிறு - குறு விவசாயிகள் கைவசம் உள்ள விதைகளை அழிக்க நினைக்கிறார்கள்.**

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை பெயர் மாற்றம் செய்ததோடு அதன் உண்மையான நோக்கத்தைச் சிதைத்துவிட்டார்கள். ஒன்றிய அரசின் பொறுப்பைத் தட்டிக் கழித்து மாநிலங்களின் நிதிச் சுமையை கூடுதலாக்கும் வகையில் இதனை மாற்றிவிட்டார்கள்.

**இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே முன்மொழியப்பட்ட இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் இந்திய விவசாயத்தை அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களுக்கு முழுவதுமாக சரணடையச் செய்வதாகும். 45 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை அமெரிக்காவிடமிருந்து வரி இல்லாமல் இறக்குமதி செய்வது என அமெரிக்கா - இந்தியா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இந்திய இறையாண்மை, விவசாயம், பொருளாதாரத்தில் மிகப்பெரும் பாதிப்பை உண்டாக்கும்.**

கடந்த இரண்டு ஆண்டுகளில் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் திருத்தச் சட்டம், வனப் பாதுகாப்பு திருத்தச் சட்டம், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் திருத்த விதிகள் ஆகிய அனைத்தும் விவசாயிகள், பழங்குடியினருக்கு மட்டுமின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் விரோதமானவை ஆகும். இன்சூரன்ஸ் துறையில் 100 சதவிகித அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

டங்ஸ்டன் கனிமத் தொகுதியை ஏலத்திற்கு அறிவித்தது பா.ஜ.க. அரசு. மக்கள் எதிர்ப்பு, தமிழ்நாடு அரசின் எதிர்ப்பு ஆகியவை காரணமாக அந்த ஏலத்தை திரும்பப் பெற்றார்கள்.

**அதிக ஆபத்தான அணுசக்தி உற்பத்தித் துறையில், லாப நோக்கத்துடன் செயல்படும் தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கு மோடி அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்காக "இந்தியாவை மாற்றுவதற்கான அணுசக்தியின் நிலையான பயன்பாடு மற்றும் மேம்பாட்டுச் சட்டம் (SHANTI)" என்ற ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.**

வரைவு விதை மசோதா, மின்சார திருத்த மசோதா மற்றும் SHANTI சட்டம் ஆகியவற்றைத் திரும்பப் பெற வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை (MGNREGA) மீட்டெடுத்து 100 நாட்களை முழுமையாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். 'விக்ஸித் பாரத் - ரோஜ்கார் அவுர் அஜீவிகா மிஷன் (கிராமின்) சட்டம், 2025' ஐ ரத்து செய்ய வேண்டும்.

இதுபோன்ற தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோதச் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த வேலை நிறுத்தத்துக்கு தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாய அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

**பா.ஜ.க. அரசு என்பது கார்ப்பரேட்டுகளுக்காக, கார்ப்பரேட்டுகளால் ஆளப்படும் கார்ப்பரேட் அரசாங்கம். இவர்களுக்கு தொழிலாளர்களோ, உழவர்களோ, பொதுவாக மக்களோ உழைப்பை மட்டும் கொடுக்க வேண்டியவர்களே தவிர, உரிமை படைத்தவர்கள் அல்ல. மக்களின் உழைப்பை, கார்ப்பரேட்டுகளுக்கு கரன்சி ஆக்கும் ஒற்றைச் செயலை மட்டுமே ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து வருகிறது. அவர்களது அனைத்து நடவடிக்கைகளும் இதனை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே நடக்கின்றன.**

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்:

# மக்களவைக்கு 2வது நாளாக சபாநாயகர் ஓம் பிர்லா வரவில்லை!

புதுடெல்லி, பிப்.12-

இந்தியா கூட்டணி பெண் எம்.பி.,க்கள் மீது அபாண்டமான குற்றச்சாட்டை சுமத்திய மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக மக்களவை செயலாளரிடம் நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் அளிக்கப்பட்டது. இதன் மீது ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. நாடாளுமன்ற கூட்டத்தொடரின் 2வது அமர்வில் இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலையில், தமக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மான நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளதால், 2வது நாளாக நேற்று சபாநாயகர் ஓம் பிர்லா மக்களவைக்கு வரவில்லை. இதனால் மூத்த உறுப்பினரான ஜெகதாம்பிகா பால் மூலம் மக்களவை வழிநடத்தினார்.

இதனிடையே, எம்.பி.,க்களின் இடைநீக்கத்தை ரத்து செய்ய வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் எம்.பி.,க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் எம்.பி., தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது இடைநீக்கத்தை சபாநாயகர் திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தினர். இதனைத் தொடர்ந்து, அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை கண்டித்தும், பிரதமர் மோடிக்கு எதிராகவும் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நரேந்தர், சரண்டர் என்ற வாசகம் அடங்கிய பேனர் மற்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் புகைப்படம் அடங்கிய பேனர்களுடன் முழக்கங்களை எழுப்பினர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் அதாவது மோடி அவர்களுக்கும், ட்ரம்ப்புக்கும் இடையே ஏற்படப் போகும் வர்த்தக ஒப்பந்தத்தினால் இந்தியாவுக்கு ஏற்படப் போகும் நன்மை என்ன?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; இந்த ஒப்பந்தத்தினால் இந்தியாவுக்கே இழப்பு. இது இரு நாடுகளுக்கும் இடையே சமமான ஒப்பந்தம் அல்ல; மேடு பள்ளமானது.**

**அமெரிக்கா 18 சதவீத வரி விதிக்குமாம்; இந்தியா வரியே விதிக்கக் கூடாதாம்.**

**நீ அரிசி கொண்டு வா; நான் உமி கொண்டு வருகிறேன்; இருவரும் ஊதி ஊதி உண்ணலாம் என்பதைப் போல அல்லவா இருக்கிறது இந்த ஒப்பந்தம் !**

## "சுவமித்வா" ஊரக நில அளவை திட்டம்

# எல்லா மாநிலங்களிலும் எப்போது செயல்படும்?

## மக்களவையில் டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, பிப்.12-

"சுவமித்வா" என பெயரிடப்பட்டுள்ள ஊரகப் பகுதிகளில் துவக்கப்பட்ட நில அளவைத் திட்டத்தின் நவீன தொழில்நுட்பக் கூறுகளின் விவரங்கள் என்ன? இதுவரை நாடுமுழுவதும் எத்தனை பேர்களுக்கு சொத்துரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது? அனைத்து மாநிலங்களிலும் எப்போது முதல் இந்த திட்டம் செயலாக்கத்திற்கு வரும் என பல்வேறு விவரங்களைக் கேட்டு நேற்று முன்தினம் நாடாளுமன்ற மக்களவையில் கழகப் பொருளாளரும் மக்களவை தி.மு.க. குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார். இதற்கு ஒன்றிய பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் லலன் அவர்கள் நேற்று முன்தினம் (10.2 2026)பதில் அளித்தார்.



### நவீன தொழில்நுட்பம்சார் "சுவமித்வா" திட்டம்

நாட்டின் கிராமங்களில் உள்ள குடியிருப்பு பகுதிகளை அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி துல்லியமான நில அளவை செய்து வீட்டுரிமையாளர்களுக்கு சொத்து அட்டைகளை மாநில அரசுகள் வாயிலாக வழங்கும் நோக்குடன் சுவமித்வா அதாவது மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ஊரகக் குடியிருப்புக்கள் நிலஅளவை த் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. டிரோன்கள் துணையுடன் வானில் இருந்து, தொடர்ந்து இயங்கும் நிரந்தர நெட்ஒர்க் வலைத்தொகுப்பு நிலையங்கள் உதவியுடன் நில அளவைகள் மேற்கொள்ளப் படுவதால், மிகத்துல்லியமாக ஐநூறுக்கு ஒன்று ( 1:500) அளவியில் சொத்துக்களின் எல்லைகள் உருவாக்கப்படும். நில அளவையின் நம்பகத்தன்மை ஊராட்சி அலுவலர்கள் உதவியுடன் மேலும் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன. அதன்பின்னர் உரிமையாளர்களுக்கு சொத்து அட்டை சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் மூலமாக வழங்கப்படும்.

### தமிழ்நாட்டில் செயல்படவில்லை!

அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் தனது பதிலில் 31 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பிரதேசங்களில் இத்திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது எனவும் இதுவரை நாடுமுழு வதும் மொத்தம் 1.86 லட்சம் கிராமங்களில் 3.06 கோடி சொத்து அட்டைகள் உருவாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால், தமிழ்நாடு, டெல்லி, அசாம், ஜார்க்கண்ட், தெலுங்கானா, சிக்கிம், கேரளா உள்ளிட்ட ஏழு மாநிலங்களில் இந்த சுவமித்வா ஊரக குடியிருப்பு பகுதிகள் நவீன நில அளவை திட்டம் செயல்படுத்தப்படவில்லை எனவும் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. - காங்கிரஸ் இடையே இணக்கமான நல்லுறவு!

## இராமநாதபுரத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!





இராமநாதபுரம், பிப். 12-

2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் கருத்துக் கேட்பு கூட்டம் நேற்று முன்தினம் (10.02.2026) இராமநாதபுரத்தில் உள்ள ஹோட்டல் பீமாஸில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தலைமை தாங்கி, அனைத்து தரப்பினரிடமிருந்தும் கருத்துகளை கேட்டறிந்து, கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையை மக்கள் எப்போதும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள். ஏனென்றால் அந்தத் தேர்தல் அறிக்கையில் கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை முதலமைச்சர் நிறைவேற்றி இருக்கிறார்.

தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளாக அறிவிக்காத பலவற்றை நிறைவேற்றித் தந்திருக்கக்கூடிய முதலமைச்சர். அவருடைய அறிவுரையின் படி, இந்தத் தேர்தல் அறிக்கை குழு பல மாவட்டங்களுக்கு சென்று, அந்தந்த பகுதிகளில் உள்ள மக்களை சந்தித்து, அவர்களுடைய கருத்துகள், கோரிக்கைகள் மற்றும் எண்ணங்களை ஒருங்கிணைத்து தேர்தல் அறிக்கையாக உருவாக்க இருக்கிறோம்.

இன்று ராமநாதபுரம் மாவட்டத்தில், பல்வேறு அமைப்புகளிலிருந்து வந்த மீனவ சமூகத்தினர் மட்டுமின்றி, சில விவசாயிகள், நெசவாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் சில மத அமைப்புகளைச் சேர்ந்த பலரும் எங்களை நேரில் சந்தித்து, அவர்களுடைய கருத்துகளை எங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். நிச்சயமாக அந்தக் கருத்துகள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு, எது தேர்தல் அறிக்கையில் கொண்டு வருவதற்கு சாத்தியமோ அதை எல்லாம் நிச்சயமாக அதில் இடம்பெறும்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து முன்வைக்கப்பட்ட பிரதான கோரிக்கைகள் குறித்த கேள்விக்கு, சில பகுதிகளில் அடிப்படை தேவைகள் தொடர்பான குறைபாடுகள் உள்ளதாகவும், குறிப்பாக மீனவர்களின் பிரச்சினைகள் மிகப்பெரும் அளவில் பிரச்சனைகளை குறித்து சொன்னார்கள்.

இந்த ஆட்சியில் எவ்வளவு சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளீர்கள் என்ற கேள்விக்கு; இதைப் பற்றி முதலமைச்சர் அறிக்கை வெளியிட்டுள்ளார். ஊடகத்தோடு இரண்டு அமைச்சர்கள் அமர்ந்து, அதுக்கான ஒரு பிரஸ் மீட்டும் கொடுத்து உள்ளார்கள். இன்றைக்கு வரைக்கும் கிட்டத்தட்ட தேர்தல் அறிக்கையில் 505யில் 400க்கு மேல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. சில வாக்குறுதிகள், ஒன்றிய அரசாங்கம் நமக்கு எதிராகவே செயல்பட்டுக் கொண்டிருப்பதால் அதை நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. சில வாக்குறுதிகள் பரிசீலனையில் உள்ளது. முக்கியமாக பெண்கள் மற்றும் மாணவர்களுக்காக முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். இத்திட்டங்கள் அனைத்தும் நிச்சயமாக முன்னிலைப்படுத்தப்படும்.

தொடர்ச்சியாக அரசுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்ற கேள்விக்கு, அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தக்கூடிய ஒரு நேரம் இந்த நேரம். அந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் முதலமைச்சர் அவர்களை நேரில் அழைத்து பேசித் தீர்வு காண்கிறோம். பல ஆண்டுகளாக தீர்வு காண முடியாத பல விஷயங்களுக்கு முதலமைச்சர் தீர்வு கண்டுள்ளார்.

தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி தொடர்பான கேள்விக்கு, தனி நபர்கள் கூறும் கருத்துகளுக்கு கட்சி பதிலளிக்க முடியாது. தி.மு.க. மற்றும் காங்கிரஸ் தலைமைகளுக்கு இடையில் இணக்கமான நல்லுறவு நிலவுகிறது; கூட்டணிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. வரும் சட்டமன்றத் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்து செயல்படும். தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளதால், தேர்தல் குழுவும் நிச்சயமாக அறிவிக்கப்படும்.

நித்தம் நித்தம் பொய் சொல்வதாக' முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பேசியது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, 'அவரைப் பற்றி சொல்கிறாரா?' என்று கேள்வி எழுப்பினார்.